# மறுமையின் விளை நிலம் இப்னு அப்பாஸ் கல்லூரி

அபூ உமைர் ஸஹ்வி

சன்மார்க்க வான் வழியே தீன் துலங்க - அன்று
தென்னிலங்கைக்கோர் நிலவை - வல்லோன்
வழிகாட்ட நாடினான் ஆகிற்று - இதன்
வழியெல்லாம் வீசுது பார் பூங்காற்று!

நபிகளாரின் நற்தோழர் இப்னு அப்பாஸ் என்ற
கலையகத்தின் உயர் நாமம் காலியின் - உற்ற
கல்பெல்லாம் கரை புரள களிப்புற்றதின்னாள்
வல்ல வளவாளர் சூழ ஒளி ததும்புது பார் கண்ணால்!

த.்.வாப்பயின்ற மாணவர் ஒளிவிளக்காய்
மடமை இருளை துடைக்கின்றார் ஏரி நெருப்பாய் - இப்னு அப்பாஸ்
துலங்குது பார் களங்கரை விளக்காய் - அதன் கரை முழுக்க
ஏற்றம் பெறுகின்றார் மனிதர் மெய் விளக்காய்!

மூன்றாவது முடிசூட்டும் திரு நாளில் - இளவல்கள்
அஞ்ஞானம் சபிக்கின்றார் - இறையில்லா எவர்க்கும்
அஞ்ஞாதவராய் எழுகின்றார். பார் இப்னு அப்பாஸ்
மக்கள் நெஞ்சின் மேல் புதுத் தென்றல் தெளிக்கிறது!

விரல் உளியால் அழகுறுவாய் செதுக்கி
விதவிதமாய் செய்த வனப்புமிகு படைப்புக்கள் போல்
அடிதடி மிகுந்த உலகில் அழகிய நற்குணங்களுடன்
கரு கருவென்ற தாடியுடன் இளவளை செதுக்குது பார் இப்னு அப்பாஸ்

பூனைக்குப் பிறந்தாலும் புலியாக மாற்றிட
காலிக்கு அனுப்புங்களென்று இப்னு அப்பாசை
பாருக்கு காட்டுமாற்போல் ஜோதியாய் துலங்குது பார்
தீமைக்கு தலை வணங்கா வீரனாய் அதன் வெற்றி முழங்குது பார்!

பட்டம் பெறும் உலமாக்கள் மட்டற்ற உவகையுடன்
பட்டாம் பூச்சிக்கனவுகளை சுமக்கிறது உங்கள் மனம்
சுட்டதங்கம் நீவீர்! பட்டை தீட்டிய வைரம் நீவீர்
இப்னு அப்பாஸ் பட்டறையில் ஜொலிக்கின்றீர் வாழியவே!

மறுமைக்கும் இம்மைக்கும் செப்பனிடும் உத்தமர்கள்
உருவாக்கும் அப்பாஸ் நல்லதொரு தொழிற்சாலை
மகுடமேற்கும் இளவள்கள் மகிழ்ந்திருங்கள் வாழ்த்துகிறேன்
இறையருள் பெற்று வாழியவே!!